# உள்கட்டமைப்பு வசதிகள்

### அரசு விதைப்பண்ணை : கீழக்கூடலூர், தேனி

கரு விதைகள் மற்றும் ஆதார விதைகளைக் கொண்டு விதைப்பண்ணை அமைத்து விதை பெருக்கம் செய்து, வேளாண்மை விரிவாக மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்து விவசாயிகள் நிலங்களில் விதைப்பண்ணை அமைத்து சான்று விதைகளை பெருக்கம் செய்து மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கு தரமான சான்று பெற்ற விதைகளை விநியோகம் செய்வதே மாநில விதைப்பண்ணையின் நோக்கமாகும் நெல் மற்றும் பயறுவகைகள் ஆகிய பயிர்களுக்கு விதைப்பண்ணைகள் அரசுப்பண்ணையில் அமைக்கப்படுகிறது.

### அரசு தென்னை நாற்றுப்பண்ணை அரசு தென்னை நாற்றுப்பண்ணை, கோவில்பட்டி, வைகை அணை

தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான தரமான நெட்டை மற்றும் நெட்டை x குட்டை தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து வழங்குவதே தென்னை நாற்று பண்ணையின் நோக்கமாகும்.

### அரசு தென்னை ஒட்டுமையம், போடிநாயக்கனூர்

நெட்டை x குட்டை தென்னங்கன்றுகளை தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்ட விவசாயிகளுக்க வழங்குவதற்காக உற்பத்தி செய்ய தரமான கலப்பின விதை நெற்றுக்களை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

### உயிர் உரங்கள் உற்பத்தி மையம், தேனி.

அசோஸ்பைரில்லம் (நெல்) அசோஸ்பரில்லம் (இதரம்), ரைசோபியம் (பயறுவகைகள்), ரைசோபியம் (நிலக்கடலை) மற்றும் பாஸ்போ பாக்டீரியா ஆகிய உயிர் உரங்கள் திட நிலையில்

உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கி, இரசாயன உரங்கள் பயன்படுத்துவதை குறைத்து மண்வளத்தை மேம்படுத்துவதே உயிர் உரங்கள் உற்பத்தி மையத்தின் நோக்கமாகும். இம்மையத்தில் இருந்து தேனி, மதுரை, திண்டுக்கல், தஞ்சாவூா் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க உற்பத்தி செய்து அனுப்பப்படுகிறது.

பூச்சிகொல்லி மருந்து ஆய்வகம் மற்றும் குறியீட்டு மையம், தேனி.
புதுதரமான பூச்சி கொல்லி மருந்துகள் விவசாயிகளை சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் பூச்சிகொல்லி மருந்துகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் பூச்சிகொல்லி மருந்து விற்பனை மையங்களில் இருந்து மாதிரிகள் எடுத்து இக்குறியீட்டு மையத்திற்கு அனுப்பப்படும். பூச்சிகொல்லி மருந்து மாதிரிகள் பின்வரும் மாவட்டங்களில் இருந்து பெறப்படும். அவை திருநெல்வேலி, அரியலூா், கன்னியாகுமரி, சிவகங்கை, தேனி, தஞ்சாவூா், திண்டுக்கல், ராமநாதபுரம், விருதுநகா், தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் மதுரை தரத்தின் முடிவுகளை பாதுகாக்க பூச்சிகொல்லி மருந்து மாதிரிகள் சிவகங்கை, திருநெல்வேலி, மதுரை ஆடுதுறை பூச்சிகொல்லி மருந்து ஆய்வகங்களுக்கு ஆய்விற்காக அனுப்பப்படும். ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் தரமற்ற மாதிரிகளை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்படும்.

மண் பரிசோதனை நிலையம், தேனி
வலை சட்ட முறையில் மண் மாதிரிகள் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் சேகரிக்கப்பட்டு மண் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டு ஆய்வ மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வின் முடிவறிக்கையின் படி மண்வள அட்டைகளள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு மண்வள அட்டையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவின்படி பயிர்களுக்கு தேவையான ரசயான உரங்கள் பயன்படுத்துவதனால் மண்ணின் தன்மை

பாதுகாக்கப்படுவதோடு ரசாயன உரங்களள் பயன்பாடு குறைந்து உற்பத்தி செலவினமும் குறைகிறது.

### உழவர் பயிற்சி நிலையம், தேனி.

தொழில் நுட்பம் சார்ந்த கிராம அடிப்படையிலான பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

### வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை, தேனி.

ஆராய்ச்சி, விரிவாக்கம் மற்றும் விவசாயிகளுக்கிடையே உள்ள இடைவெளியினை குறைத்து ஒரு பாலமாக செயல்பட்டு தொழில் நுட்பங்களை செயல் விளக்கங்கள், பயிற்சிகள் மற்றும் கண்டுணா சுற்றுலா மூலம் விவசாயிகளுக்கு எடுத்து செல்வேதே இதன் நோக்கமாகும்.

## திட்டங்கள்:

தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்து சென்று வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்காக பல்வேறு திட்டங்கள் வேளாண்மைத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### மத்திய அரசு சார்பு திட்டங்கள்:

- தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டங்கள் (NADP)- நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்தக்கள், கரும்பு மற்றும் பசுந்தாள் உரம் மூலம் மண்வள்தை மேம்படுத்துதல்.
- தேசிய எண்ணெய் வித்து மற்றும் எணணெய்பனை இயக்கம் (NMOOP)- எண்ணெய் வித்துக்கள், எண்ணெபனை மற்றும் எண்ணெய்வித்து மரப்பயிர்கள்
- தேசிய உணவு பாதுகாப்பு திட்டங்கள் (NFSM) - பயறுவகைகள் மற்றும் சிறுதானியங்கள்
- தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கம் (NMSA) – ஒருங்கிணைந்த பண்ணைம்.

- தென்னை வளர்ச்சி வாரியத் திட்டங்கள்
- விதை கிராம திட்டம் - நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள் மற்றும் எண்ணெய்வித்துக்கள் சான்று விதை விநியோகம்,
- பாரம்பரிய வேளாண்மை சாகுபடி (PKVY) - இயற்கை வழி சாகுபடி தொழில் நுட்பத்தை ஊக்குவித்தல்
- பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டம் (PMKSY) – ஐ வேளாண்மைப் பயிர்களுக்கு மானியத்தில் சொட்டு நீர்பாசனம் அமைத்துக் கொடுத்தல்.
-

**மாநில அரசு சார்பு திட்டங்கள் :**

- தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் (TNCCM).
- நீடித்த நிலையான மானாவாரி வேளாண் இயக்கம் (MSDA) – மானாவாரி சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி
- கூட்டுப்பண்ணையம் - உழவர் உற்பத்தி நிறுவனம் அமைத்தல்
- விதைபெருக்கு திட்டம் - தமிழ்நாடு விதை மேலாண்மை முகமை
- பிரதம மந்திரி பசல பீமா யோஜனா - பயிர் காப்பீடு.
- ஐயம்வார்ம் - நீர் மேலாண்மை மற்றும் வளர்ச்சி திட்டம்
- மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி